10. திரு. கி. மனோகரன்
11. திரு. சோ. மா. இராமச்சந்திரன்
12. திரு. கு. ரமணி
13. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
14. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
15. திரு. பொ. உத்திராபதி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(இ) மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திரு. சித. சிதம்பரம், திரு. ஏ. சந்திரசேகரன், திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. ஆர். டி. கோபாலன் ஆகியோரின் பதவிக் காலம் 15—11—1984 ஆம் நாளுடன் முடிவடைந்து விட்டதால் பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங் களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. எனவே வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 6—5—1987 புதன் கிழமை மாலை 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள் கள் 7—5—1987 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 7—5—1987 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங் களுக்கு மேற்படுமாயின் 9—5—1987 சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை சென்னை கோட்டையில் இருக்கும் முன்னாள் சட்டமன்ற மேலவை மண்டப கிழக்கு வளாகத்தில் வாக்கெடுப்பு நடைபெறும்.